Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.202/2022, Cr.No.747/2020, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | சுபாஷினி |
| **வயது** | 26 |
| **தந்தை/கணவர் பெயர்** | ஜெகதீஷ் |
| **கிராமம்** | சு.பள்ளிப்பட்டு, அண்ணாநகர் |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். தேதி மாதம் நினைவில்லை. சம்பவம் நடந்த போது என்னுடைய அப்பா வேலைக்காக வெளியூர் சென்றிருந்தார். என்னுடைய அம்மா நிலத்தில் இருந்தார். கடந்த 2020 –2021 ம் ஆண்டு மாலை நேரம் சுமார் 03.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்து போது, என்னுடைய தாத்தா சில்லறை வாங்கி வருமாறு கூறியதால் கடைக்கு சென்று கார்த்திகேயன் மனைவியிடம் வாங்க சென்றேன். அவர் மனைவி இல்லாததால் கடையில் இருந்த அவர் சில்லறை கொடுத்த பின்னர் என்னை உள்ளே வருமாறு அழைத்து என்னிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சி செய்தார். நான் வரமாட்டேன் என்று கூறியதற்கு என்னுடைய தலையில் அடித்து உள்ளே இழுத்துச் சென்று என் மார்பகத்தை தொட்டார். பின்னர், நான் கையை உதறிவிட்டு வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் கூறினேன். மேலும், என் கணவரிடம் கூறினேன். சில நாட்கள் ஆதாரங்கள் இல்லாததால் புகார் அளிக்காமல் அமைதியாக இருந்தோம். பின்னர் மேற்படி சம்பவத்தால் எனக்கு நிச்சயக்கப்பட்ட நபருக்கும் எதிரிக்கும் சண்டை ஏற்பட்டது. இது குறித்து கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்தோம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

சம்பவம் நடந்தபோது நான் கல்லூரி முடித்துவிட்டு வீட்டில் இருந்தேன். என்னை சில்லறை வாங்க அனுப்பிய போது வீட்டில் அப்பா, அம்மா இல்லை. யாரும் இல்லாதபோது நான் எதிரியின் கடைக்கு சென்றதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்கூறிய சம்பவம் எதிரியின் கடையில் நடந்தது என்றால் சரிதான். எதிரியின் கடை தெருவில் இருந்து சற்று உள்ளே உள்ளது. எதிரியின் வீடும் கடையும் வேறு வேறு இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ஒரே இடத்தில் தான் உள்ளது. நான் அளித்த புகாரில் எதிரி தனது வீட்டில் படுத்து கொண்டிருந்த போது நான் சில்லறை வாங்க சென்றதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் எதிரியின் வீட்டில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல வீடும் கடையும் ஒரே இடத்தில் தான் உள்ளது. எதிரி என்னிடம் கேட்டிடம்(Gate) சில்லறை கொடுத்து கையைப்பிடித்து இழுத்து சென்றார். போலீசார் விசாரணையில் எதிரி என் கையை பிடித்து இழுத்துச் சென்றார் என்று கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியின் வீடு தனியாக உள்ளது. சாட்சி தற்போது எதிரியின் வீடும் கடையும் ஒன்றாக உள்ளது என்று கூறுகிறார். என்னுடைய தந்தை சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்னர் தான் ஊருக்கு வந்தார். எனது தாயார் சம்பவம் நடந்த உடனடியாக வீட்டிற்கு வந்தார். ஆதாரம் இல்லாததால் பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரி ஒரு வாரம் கழித்து எனக்கு நிச்சயம் செய்த நபரை அடித்தார். எதிரி எங்களுக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் ஏஜென்ஸி நிறுவனம் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவியை என் கணவர் தாக்கியதாக 793/2020 என்ற வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கியதால் என்னடைய மாமனார் புகார் அளிக்க வேண்டாம் என்று கூறியதால் எதிரி தரப்பில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பின்னர் ஏற்பட்ட சண்டையில் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது. ஆனால், அவரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை. எதிரி தாக்கியதால் எனது கணவருக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான புகாரை காவல் துறையினர் வீட்டிடம் வந்து விசாரித்த பின்னர் எனது தாயார் காவல் நிலையத்தில் சென்று கொடுத்தார். சம்பவம் நடைபெறும் வரையிலும் எதிரிக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, அவர் எனக்கு அண்ணன் மாதிரி. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் வீட்டில் இல்லாதபோது அவர் கூறியதால் நான் சில்லறை வாங்க சென்றதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது தாயார் வீட்டின் பின்னால் உள்ள நிலத்தில் தான் இருந்தார். சம்பவம் கேட்டிடம் நடந்ததாக கூறும் போது நான்

எதிரியின் வீட்டினுள் சென்றதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எதிரி அப்போது குடிபோதையில் இருந்தார். நான் எதிரியிடம் கேட்டிடம் சென்று சில்லரை பெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எங்களிடம் சண்டைக்கு பின்னர் அழைத்து புகார் பெற்றனர். நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் பொதுக் குழாயை உடைத்ததாக பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. நான் புகார் அளித்ததற்கும் நீதிமன்றம் விசாரணைக்கும் முரண்பாடு உள்ளது என்றாலும் எதிரியின் மீது உள்ள முன் விரோதத்தின் காரணமாக அவரின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.09 18:27:45 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.